sethuppattu peroorachi

<u>சேத்துப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலர் (பொ).அவர்களின்</u>
<u>செயல் முறைகள் முன்னிலை: திரு.பா.ரவி</u>

ந.க.எண். **239/ 2018/அ2.** நாள்: **10.07.2018.**

பொருள்: **அனுமதியற்ற மனை** வரன்முறைப்படுத்துதல் **திட்டம் 2017** – பேரூராட்சிகள் நிர்வாகம் திருவண்ணாமலை மாவட்டம் – சேத்துப்பட்டு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சர்வே எண். 32/1B, 36/2B (ம) 32/4 (ப), ல் 1.28 எக்கர் (5180.00 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு வேலூர் மண்டல நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து கொள்கை அளவிலான மனைபிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது இறுதி ஒப்புதல் அளித்து ஆணையிடுதல் சார்பு

பார்வை: 1.அரசாணை எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.எ.4(3), நாள். 04.05.2017

2.அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.எ.4(3), நாள். 13.10.2017

3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களின் ந.க.எண். 2428/2017/வேம3, நாள்.29.05.2018.

4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational guidelines. Roc. No.13193/2017/LA2, நாள்.30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017 மற்றும் 20.12.2017.

5. சேத்துப்பட்டு பேரூராட்சி மன்ற சாதாரணக்கூட்டத்தின் தீர்மான எண். 54/ நாள். 29.06.2018.

6.இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.239/2018 அ1 நாள்.17.06.2018

7. வரன்முறை கட்டணம் ரூ.53880/- செலுத்தப்பட்ட அசல் சலான் நாள். 17.06.2018.

8. வளர்ச்சிக்கட்டணம் ரூ.134700/- பேரூராட்சிக்கு வங்கி (வரைவோலையாக) சலான் எண். 281/2018 – 2019 நாள்.10.07.2018.

9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Roc. No.13193/2017/LA1, நாள். 27.03.2018.

10. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களின் நேர்முக கடிதம் எண்.739/2017/வேம3, நாள்.13.04.2018.

11. தொடர்பான ஆவணங்கள்.

*******

ஆணை :-

பார்வை (1) மற்றும் (2) ல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி பார்வை (3) ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களின் ந.க.எண்.2428/2017/வேம3/நாள்.29.05.2018 கடிதத்தில் சேத்துப்பட்டு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட, 32/1B, 36/2B (ம) 32/4 (ப), ல் 1.28 ஏக்கர் (5180.00 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி ம.வ./ந.ஊ.து.இ. (வே.ம) வரன்முறைப்படுத்துதல் <u>767(R)/2018</u> என எண்ணிட்டு ஒப்புதல் வழங்கி வரப்பெற்றுள்ளது.

..2..

R. R. Sakthi pravan

மேற்படி பொருள் குறித்து பார்வை (5) ல் காணும் பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் நகர் ஊரமைப்பு துறையினரால் வரன்முறைப்படுத்தி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைபிரிவிற்கு அம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு தனித்த மனைக்கும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியினால் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அந்தந்த மனை உரிமையாளர்களிடமிருந்து வரன்முறைக்கட்டணம், வளர்ச்சிக் கட்டணம் பெற்றுக் கொண்டு உள்ளாட்சியினால் இறுதி ஒப்புதல் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பார்வை 6 – ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய வளர்ச்சிக்கட்டணம் மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்க்கப்படாத 17 (பதினேழு மட்டும்) மனைகளுக்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி 1.00 ச.மீட்டருக்கு ரூ. 75 வீதம் 1796 ச.மீட்டருக்கு ரூ.134700/- /–ஐ (ஒரு லட்சத்து முப்பத்தி நான்காயிரத்து ஏழுநூறு மட்டும்) பார்வை (8) ல் கண்டுள்ளவாறு செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் அரசு தலைப்பில் செலுத்த வேண்டிய வரன்முறைக்கட்டணம் மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்க்கப்படாத 17 (பதினேழு மட்டும்) மனைகளுக்கு அரசாணையில் தெரிவித்துள்ளபடி 1.00 ச.மீட்டருக்கு ரூ.30 வீதம் 1796 ச.மீட்டருக்கு ரூ.5388[illegible] ஐம்பத்தி மூன்றாயிரத்து எட்நூற்று என்பது மட்டும்) அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட அசல் சலான் பார்வை (7) ல் கண்டுள்ளவாறு செலுத்தப்பட்டுள்ளது.

எனவே சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.32/1B, 36/2B (ம) 32/4 (ப), ல் 1.28 ஏக்கர் (5180.00 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.து.இ. (வே.ம) வரன்முறைப்படுத்ததுல் <u>767(R)/2018</u> எண்ணிட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதில் அமைந்துள்ள விற்கப்படாத கீழ்காணும் 17 மனைகளுக்கு, நிபந்தனைகளுக்கு உட்பட்டு இதன் மூலம் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| சர்வே எண். | விற்கப்படாத மனை எண்கள் | மனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 32/1B, 36/2B (ம) 32/4 (ப), ல் 1.28 ஏக்கர் (5180.00 ச.மீ) | மனை எண்.4,9,10,11,12,13,15,16,17,20, 21,27,28,29,30,31,32, | 17 |

**நிபந்தனைகள்.**

1. வரன்முறைப்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவின் பரிசீலனைக்கு நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ, வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஒப்புதலை ரத்து செய்ய நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்களுக்கு பரிந்துரை செய்து தொழில்நுட்ப ஒப்புதல் ரத்து செய்யப்படும்.
2. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையினால் வரன்முறைப்படுத்தப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.
3. விதிகளின் படி வரன்முறைப்படுத்தி மனையில் அமையும் கட்டிடம் வரைன்முறைப்படுத்தியதற்கு பொறுப்பாகாமை ஆகும். மனையின் உரிமையாளர் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் உரிமம் பெற முறையாக விண்ணப்பித்து வரைபறைகளின் படி கட்டிடம் உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

..3..

4. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0'' x 4'0'' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்களின் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

5. எதிர்வரும் காலங்களில் மேற்படி மனைப்பிரிவு ஒப்புதல் குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் அரசு துறை தணிக்கையால் தெரிவிக்கப்படும் கட்டணம் குறித்த குறைபாடு மற்றும் இதர ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டால் தாங்களே அதனை சரி செய்து தரப்பட வேண்டும்.

6. மனைப்பிரிவு சம்மந்தமான அவ்வப்பொழுது பிறப்பிக்கப்படும் அரசாணைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

7. பார்வை 4 – ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை (Operational Guidelines Rule No. 14 (c) – யில் நகர் ஊரமைப்பு துறையினால் அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கையளவில் ஒப்புதல் மட்டுமே அளிக்கப்படுகிறது. அம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு தனித்த மனைக்கும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியினால் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அந்தந்த மனை உரிமையாளர்களிடமிருந்து வரன்முறைக்கட்டணம், வளர்ச்சிக் கட்டணம் பெற்றுக் கொண்டு உள்ளாட்சியினால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

8. பார்வை 9 மற்றும் 10 – ல் சென்னை நகர் அமைப்பு ஆணையர் அவர்கள் மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்களின் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் நெறிமுறைகளுக்குட்பட்டு நடக்க வேண்டும்.

செயல் அலுவலர்,
சேத்துப்பட்டு பேரூராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்.

10/7/18

பெறுநர் :

திரு.ஆர்.சக்திபிரசன்னா,
1,வெங்கடாஜலபதி தெரு,
சேத்துப்பட்டு,
திருவண்ணாமலை மாவட்டம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள்.
2. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்
3. வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வேலூர் அவர்கள்.
4. திருவண்ணாமலை உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குநர் அவர்கள்.

நகல்.

1. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சேத்துப்பட்டு .
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், சேத்துப்பட்டு
3. அலுவலக கோப்பிற்கு,
4. இருப்பு கோப்பிற்கு.

R.R Sakthi prasan

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்:
முன்னிலை : திரு. சுப்ரமணியம், டி.சி.இ.,

ந.க.எண்.2428 /2017 / வே.ம.3

நாள்: 29.05.2018

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு, மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம்–2017 1.28 ஏக்கர் (5180.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்04.05.2017.
2) அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்.13.10.2017.
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193 /2017 / எல்ஏ2, நாள்.30.10.2017, 31.10.2017,07.11.2017,17.11.2017 மற்றும் 20.12.2017.
4) மனுதாரர். திரு. சக்திபிரசன்னா. அவர்களின் விண்ணப்பம் நாள். 20.11.2017.

----

## உத்திரவு

பார்வை (1 ) மற்றும் (2) –ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)–ல்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (4)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், சேத்துப்பட்டு பேரூராட்சி, சேத்துப்பட்டு சர்வே எண்கள்.32/1பி,36/2பி(ம) 32/4 (ப) , 1.28 ஏக்கர் (5180.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.து.இ.(வே.ம) வரன்முறைபடுத்துதல் எண். 767 **(R)**/2018 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 5180.00 ச.மீ (அ) 55757.00 ச.அடி (அ) 1.28 ஏக்கர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : 36 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 17 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : (1எ,1[illegible], 1–3, 5–8, 18,19, 22–26 ) |
| விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு | : 20040.00 ச.அடி |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : 19 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : (4, 9,10,11–17,20,21,27–32 ,33) |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : 19314.00 ச.அடி |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு (மனைஎண்கள்: 14,33) | : 2190.00 ச.அடி – 10.18% |

R.R. Sakthi [signature]

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:

3) பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| இணையதள வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO - DTCP/L/0028768/2017, நாள்.17.11.[illegible]/17 DTCP/L/0074509/2017, நாள்.07.04.2018 –ன் படி விற்கப்படாத 19 மனைகளுக்கு கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ 9,500/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் (online) வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

4) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

| மனை எண் | பரப்பளவு (ச.மி) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– (ரூபாய் வீதம் (ரூபாயில் முப்பது வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 75/– ரூபாய் வீதம் (ரூபாயில் எழுபத்தைந்து வீதம்) |
|---|---|---|---|
| | | | |
| விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத மனைகளின் பரப்பு குறித்த விவரம் மற்றும் அதற்குரிய வளர்ச்சிக்கட்டணம், வரன்முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்துவது குறித்த விவரம் தனித்தாளில் தயாரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | | | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு

| | |
|---|---|
| " 0217,Urban Development -60 Other Urban Development Scheme-800 .Other receipts AT Receipts under Regularization charges of Unapproved Layout and Plots –DTCP (DPC 0217 60800 AT 0007) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

3) அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.13.10.2017–ல் விதி எண்.7 (g) (ii) –ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்கா–2 ஆகியவை தானப்பத்திரம் எண்.2951/2014 மனை எண்கள்.51, 52 (9701/4 ச.அடி) ஆகியவை வேப்பூர் ஊராட்சிக்கு தானமாக கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் மனைப்பிரிவு பூங்கா–1 சம்மந்தப்பட்ட

P.P. Sakthi Paran

உள்ளாட்சிக்கு உரிமையானதாகும். (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

4) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.

29/5/2018

<u>இணைப்பு:</u> மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்
மற்றும் உத்தரவு நகல்

<u>பெறுநர்:</u>

3) செயல் அலுவலர்,
சேத்துப்பட்டு பேரூராட்சி,
சேத்துப்பட்டு வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

4) மனுதாரர். திரு. சக்திபிரசன்னா
எண்–1, வெங்கடாசலபதி தெரு,
சேத்துப்பட்டு,
சேத்துப்பட்டு வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

| | |
|---|---|
| 3) உதவி இயக்குநர் (நில அளவை)<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>வேலூர் மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின்<br>பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 4) வட்டாட்சியர்,<br>சேத்துப்பட்டு வட்டம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின்<br>பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 5) சார்பதிவாளர்,<br>சேத்துப்பட்டு சார்பதிவாளர் அலுவலகம்,<br>சேத்துப்பட்டு. | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின்<br>பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 6) நகர் ஊரமைப்பு ஆணையர்,<br>807, அண்ணா சாலை, சென்னை – 2. | (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது) |

7) கோப்பு

8) வைப்பறை

R.R. Sakthi Prasanna